கல்குடா கல்வி வலய வலநிலைய பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை கு.பொ.த (இ/த) – 2018 ஆனி

6 தரம்: 13 (2018)	தவணை: 06	விவசாய விஞ்ஞானம் -I	நேரம்: 2மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. இலங்கையின் காலநிலை வலயம் பொதுவாக மூன்றாக வகுக்கப்பட்டுள்ளது கீழ் வரும் கூற்றுக்களில் உலர்வலயத்திற்கு ஏற்புடையதல்லாத கூற்று
   1. ஜனவரி நடுப்பகுதி தொடக்கம் மார்ச் நடுப்பகுதிவரை உலர் காலநிலை நிலவுகின்றது
   2. உலர் வலயப் பகுதிகளில் இரு முடி மழைவீழ்ச்சிக் கோலம் உள்ளது
   3. உலர் வலயப் பகுதிகளில் வடகீழ் பருவக்காற்றின் செல்வாக்கே பெரிதும் காணப்படுகின்றது
   4. உலர்வலயத்தில் அதிகளவு பரந்துள்ள மண் வகை செங்கபில மண்ணாகும்
   5. பெரும் போகப் பயிர்ச் செய்கை உலர் வலயத்தில் மே தொடக்கம் செப்டம்பர் வரை மேற்கொள்ளப்படும்


2. வித்துக்களின் வாழ்தகவுடன் தொடர்புடைய அகக்காரணி
   1. விகாரங்கள் 2. காற்றூட்டம் 3. நோய், பீடைத்தாக்கம்
   4. தலைமுறையுரிமைக்காரணி 5. வெப்பநிலை

3. மண்ணில் நடைபெறும் கற்றயன் பரிமாற்றக் கொள்ளவை (CEC) பாதிக்காத காரணி
   1. களியின் வகை 2. மண்ணின தோற்ற அடர்த்தி 3. மண்ணின் இழையமைப்பு
   4. உக்கலின் அளவு 5. மண்ணின் P^H பெறுமானம்

4. பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றுக்களைத் தெரிவு செய்க
   A. அமில மண்ணில் போசணைப் பொருட்கள் நச்சுத்தன்மையடையும்
   B. அமில மண்ணில் Ca , Mg போன்ற மூலகங்கள் தாவரங்களுக்குப் போதிய அளவு கிடைக்கும்
   D. காரமண்ணைத் திருத்துவதற்கு சுண்ணாம்பு இடப்படுகின்றது
   E. நீரைத் தேக்கி வைத்து வடியவிடுவதன் மூலம் உவர் மண்ணைத் திருத்தலாம்
   1. Aயும் , Bயும் 2. Aயும் , Cயும் 3. Aயும் , Eயும்
   4. Bயும், Cயும் 5. எல்லாக் கூற்றுக்களும் பிழையானவை

5. N வட்டம் பொருந்தாத செயன் முறை எது?
   1. நைதரசனேற்றம் 2. நைதரசனிறக்கம் 3. அழுகல்
   4. நைதரசன் பதித்தல் 5. தகனம்

6. தாவரத் தண்டு உச்சிக்கு ஒருபக்க ஒளியை வழங்கும் போது ஏற்படும் மாற்றம் படத்தில் காட்டப்பட்டுள்ளது இச்செயற்பாட்டுக்கு காரணமான தாவர ஓமோன் எது?
   1. ஜிபரலின் 2. ஒட்சின் 3. சைற்றோகைனின்
   4. அப்சீசிக்கமிலம் 5. எதிலின்



7. கந்தகத்தின் (S) பற்றாக்குறை காரணமாக ஏற்படக்கூடிய குறைபாட்டறிகுறி/அறிகுறிகள்
   1. முதிர்ந்த இலைகளில் முதலில் வெளிறல் தோன்றும்
   2. முதிர்ந்த இலைகளில் நரம்புகளிடையான வெளிறல் தோன்றும்
   3. இளம் இலைகளில் முதலில் வெளிறல் தோன்றும்
   4. சுருண்ட இலைகளைக் கொண்ட குறளான தாவரங்கள்
   5. எரிந்த விளிம்புகளும் இளம் இலைகளில் இறந்த புள்ளிகளும்

www.kedu.lk

8. ஒரு குறிப்பிட்ட பகுதியில் நாளாந்த ஆவியுயிர்ப்பு ஆவியாதல் 4.00mm இப்பகுதியில் 2ஹெக்டயர் நிலப்பரப்பில் உள்ள மிளகாய்ச் செடிகளுக்கு நாளாந்தம் பாய்ச்ச வேண்டிய அதிகுறைந்த நீரின் கனவளவு

1. $0.08m^3$ 2. $0.80m^3$ 3. $8.00m^3$ 4. $80.00m^3$ 5. $800m^3$

9. மரக்கறித் தோட்டம் ஒன்றில் விவசாயி ஒருவர் வாடல் நோயை அவதானித்தார் நோயுற்ற தாவரத் தண்டொன்றை வெட்டி ஒருகுவளையில் உள்ள தண்ணீரில் வைத்த போது வெட்டிய பகுதியில் இருந்து பச்சைநிற திரவக்கசிவு வெளியேறியது நோய்க்காரணியாக இருக்கக் கூடியது

1.நெமற்றோட்டுக்கள் 2. பங்கசு 3. வைரசு 4. புரட்டோசோவா 5. பற்றீரியா

10. கசிவு சம்பந்தமான சில கூற்றுக்கள் வருமாறு

A. நீர் செல்துளைகள் ஊடாக நீர் சுரக்கப்படல் கசிவு என்று பெயரிடப்பட்டுள்ளது

B. பொதுவாக இரவு வேளைகளிலேயே கசிவு நடைபெறும்

C. சிறப்பு ஈரப்பதன் குறையும் வேளையில் கசிவு நிகழும்

மேற்கூறியவற்றில் மிகவும் சரியான கூற்று/கூற்றுக்கள்

1. A மட்டும் 2. B மட்டும் 3. Cமட்டும் 4. A,B மட்டும் 5. A,C மட்டும்

11. MS (முராசிகே- ஸ்கூக்) ஊடகமானது ஒரு

1. தாவர ஓமோன் ஆகும் 2. இழையவளர்ப்பு ஊடகமாகும் 3. தாவர வளர்ச்சிச் சீராக்கியாகும்
4. திரவப்பசளையாகும் 5. பங்கசு நாசினியாகும்

12. உருமாறிய பாறைகள் உருவாக்கப்படுவது

1. மக்கமாவின் சடுதியான குளிர்ச்சியால்
2. எரிபாறைகளையும் அடையற்பாறைகளையும் உயர் அமுக்க வெப்பநிலைக்கு உட்படுத்துவதன் மூலம்
3. களிப்படிவுகளை உயர் அமுக்க வெப்பநிலைக்குட்படுத்துவதன் மூலம்
4. பிரதான பாறைகளில் வானிலையால்ழிதலால்
5. மேற்கூறிய எந்த முறையினாலும் அல்ல

13. ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாட்டில்

1 .பீடைக்கட்டுப்பாட்டை நிறைவேற்றுவதில் பீடைக்கட்டுப்பாட்டு முறைகள் அனைத்தும் ஒரேவேளை பயன்படுத்தப்படும்
2. பீடைக்கட்டுப்பாட்டின் எக்கட்டத்திலும் பீடை கொல்லிகள் பயன்படுத்தப்படுவதில்லை
3. சகல பீடைக்கட்டுப்பாட்டு முறைகளையும் பயன்படுத்தி பீடைகளை ஒளிப்பதற்காக முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது
4. வேறுபட்ட பீடைக்கட்டுப்பாட்டு முறைகளை ஓர் ஒழுங்கு முறையில் பயன்படுத்தி பொருளாதார ரீதியில் தீங்கு விளைவிக்கும் மட்டத்திற்கு கீழ் பீடைக் குடித்தொகையை வைத்திருத்தல்
5. வேறுபட்ட பருவங்களில் தனித்தனியாக வேறுபட்ட பீடைக்கட்டுப்பாட்டு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

14. *Bacillus thuringiensis* என்பது

1. தாவரங்களில் நோய்களை உண்டாக்கும் பற்றீரியா
2. இலப்பிடொப்தராக் குடம்பிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படும் பற்றீரியா
3. தாவரங்களில் நோய்களை உண்டாக்கும் பங்கசு
4. உயிரியற் பீடைக்கட்டுப்பாட்டுக்குப் பயன்படும் பங்கசு
5. சிறைப்பைகளை உண்டாக்கும் வட்டப்புழுக்களைக் கட்டுப்படுத்தப் பயன்படும் பற்றீரியா

15. விவசாயப் பண்ணை ஒன்றிலே கோழிக்குஞ்சுகளுக்கு வெண்ணிறக்கழிச்சல் உண்டாகியதும் குதத்தைச்சுற்றி இறக்கைகள் ஈரமாகி வெண்ணிறச் சாந்து போன்ற ஒரு பொருளினால் ஒன்றோடு ஒன்று ஒட்டுப்பட்டும் உணவு உட்கொள்ளாமலும் தூக்கம் ஏற்பட்டும் இருக்கக் காணப்பட்டது இந்நோய்


1. ரணிக்கட் 2. மரெக்ஸ் 3. புள்ளோரம் 4. கோழிஅம்மை 5. கொக்சிடியோசிஸ்

16. கீழே தரப்பட்டுள்ள இலிங்கமில் இனப்பெருக்கப்பாகங்களை முறையே சரியாகக் குறிப்பது

1. தண்டுக்கிழங்கு, முகிழ், குமிழ்
2. வேர்தண்டுக்கிழங்கு, குமிழ், முகிழ்
3. வேர்தண்டுக்கிழங்கு, முகிழ், குமிழ்
4. தண்டுக்கிழங்கு, குமிழ், முகிழ்
5. வேர், முகிழ், குமிழ்



A



B



C

www.kedu.lk





17. இருவித்திலை வித்துக்கள் பற்றிய மிகத் திருத்தமான கூற்று
    1. சுற்றுக்கனியம் வித்துடன் இறுக்கமாக ஒட்டப்பட்டுள்ளது
    2. வித்திலை சிறுபரிசை எனப்படும்
    3. நுண்துவாரமும் வித்துத் தழும்பும் காணப்படுவதில்லை
    4. வித்திலைகள் குறைந்த முனைப்பான இழையங்களாக மாறியுள்ளன.
    5. முதிர்ந்த வித்தில் வித்தகவிழையம் காணப்படுவதில்லை

18. விவசாயப் பண்ணை விலங்குகளின் உடல் வெப்பநிலை பற்றிய மிகத் திருத்தமான கூற்று
    1. மாடும் ஆடும் இளஞ்சூட்டுக்குருதிநிலை விலங்குகளாக இருக்கும் அதேவேளை கோழியும் வாத்தும் சூழல் வெப்பக் குருதி விலங்குகளாகும்
    2. விவசாயப் பண்ணையில் வளர்க்கப்படும் எல்லா முலையூட்டி விலங்கக்களும் இளஞ்சூட்டுக் குருதி விலங்குகளாக இருக்கும் அதேவேளை எல்லாப் பறவைகளும் கூழல் வெப்பக் குருதிநிலை விலங்குகளாகும்
    3. விவசாயப் பண்ணை விலங்குகள் இளஞ்சூட்டுக்குருதிநிலை விலங்குகளாக இருக்கும் அதேவேளை பறவைகளின் சாதாரண உடல் வெப்பநிலை முலையூட்டி விலங்குகளின் சராசரி உடல் வெப்பநிலையிலும் பார்க்கக்கூடியதாகும்
    4. விவசாயப் பண்ணை விலங்குகள் இளஞ்சூட்டுக் குருதிநிலை விலங்குகளாக இருக்கும் அதேவேளை பறவைகளினதும் முலையூட்டிகளினதும் சராசரி உடல் வெப்பநிலைகளுக்கிடையே வேறுபாடு இல்லை
    5. விவசாயப் பண்ணை விலங்குகளின் சராசரி உடல் வெப்பநிலை அவை வாழும் பிரதேசத்திற்கு ஏற்ப வேறுபடலாம்

19. ஆவியுயிர்ப்பு, ஆவியாதல் என்பன பற்றிய மிகத்திருத்தமான கூற்றுக்கள்
    1. இவ்விரு செயன்முறைகளும் காவற்கலங்களின் மூலம் ஒழுங்காக்கப்படுகின்றன
    2. இவ்விரு செயன்முறைகளும் எம் மேற்பரப்பிலும் நடைபெறலாம்
    3. ஆவியுயிர்ப்பு உடற்றொழிற் செயன்முறையாக இருக்கும் அதேவேளை ஆவியாதல் பௌதிகத் தோற்றப்பாடாகும்
    4. ஆவியுயிர்ப்பு உடற்றொழிற் செயன்முறையாக இருக்கும் அதேவேளை ஆவியாதல் உயிரியற் செயன்முறையாகும்
    5. ஆவியுயிர்ப்பின் மூலம் மேற்பரப்பு உலரச் செய்யப்படும் அதேவேளை ஆவியாதலின் மூலம் மேற்பரப்பு குளிர்சியடையச் செய்யப்படும்

20. முதலான நிலப்பண்படுத்தலின் போது
    1. மண்ணின் உண்மை அடர்த்தியும் நுண்துளைகளையுடைய தன்மையும் அதிகரிக்க தோற்ற அடர்த்தி மாற்றமடையாதிருக்கும்
    2. மண்ணின் உண்மை அடர்த்தியும் தோற்ற அடர்த்தியும் மாற்றமடைய நுண்துளைகளையுடைய தன்மை மாற்றமெய்தாதிருக்கும்
    3. மண்ணின் தோற்ற அடர்த்தி குறைவடைய நுண்துளைகளையுடைய தன்மை அதிகரிக்க உண்மையான அடர்த்தி மாற்றமெய்தாதிருக்கும்
    4 மண்ணின் உண்மையான அடர்த்தியும் நுண்தளைகளையுடைய தன்மையும் குறைவடைய தோற்ற அடர்த்தி மாற்றமெய்தாதிருக்கும்
    5. மண்ணின் நுண்துளைகளையுடைய தன்மை அதிகரிக்க தோற்ற அடர்த்தியும் உண்மையான அடர்த்தியும் மாற்றமெய்தாதிருக்கும்

21. இழைய வளர்ப்புச் செயல் நுட்பத்தைப்பயன்படுத்துவதன் மூலம்
    A- முளைவகைகளை உற்பத்தி செய்ய முடியும்
    B- தாவரத் சந்ததிகளை உற்பத்தியாக்குவதற்கு தேவைப்படும் நேரத்தின் அளவினைக் குறைக்க முடியும்
    C- தனித்தாய்த் தாவரமொன்றிலிருந்து வேறுபட்ட சிறப்பியல்புகளைக் கொண்ட தாவரங்கள் உற்பத்தியாக்கப்படலாம்
    மேற்குறிப்பிட்ட அம்சங்கள் தொடர்பில் பின்வருவனவற்றுள் எது சரியானதாகும்?
    1. A யும் C யும் மாத்திரம் 2. B யும் C யும் மாத்திரம் 3. A மாத்திரம்
    4. A யும் B யும் மாத்திரம் 5. C மாத்திரம்

22. கட்டுப்படுத்திய நிலைமகளில் பயிரிடுவதன் மூலம் பெறத்தக்க பயன்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
    A- அதிகளவு சூரியக்கதிரிலிருந்து பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளல்
    B- அதிகளவு காற்றுள்ள பிரதேசங்களில் பயிடுதல்
    C. தொடர்பு (சார்) ஈரப்பதன் குறைவாக இருக்கும் பிரதேசங்களில் கூடுதலான ஈரப்பதன் தேவையான பயிர்களைப் பயிரிடல்
    D. வயலில் நடு முன்பாக நாற்றுக்களை வன்மையாக்கல்
    E. நீரைக்காத்துப் பயிரிடல்
    இவற்றில் லேத் ஹவுஸ் (Lath house) பயன்படுத்தி விவசாயி பெறத்தக்க அனுகூலங்கள்
    1. A,B,C ஆகியன மாத்திரம் 2. B,C,D ஆகியன மாத்திரம்
    3. A,E ஆகியன மாத்திரம் 4. B,E ஆகியன மாத்திரம் 5.A,D ஆகியன மாத்திரம்

www.ikeduk

23. பசுவில் பாலைக் கறப்பதற்கு முதல் ஸ்ரிப்கப் (strip cup) சோதனை நடாத்தப்படுவது
1. பாலின் கொழுப்புச் சதவீதத்தை சோதிப்பதற்கு
2. கறக்கத்தக்க பாலின் அளவை அறிந்து கொள்வதற்கு
3. பாலில் இருக்கும் திண்மப் பொருளை அறிந்து கொள்வதற்கு
4. மடிவீக்க நோய் இருக்கிறதா எனச் சோதிப்பதற்கு
5. பாலில் இருக்கும் விற்றமின் அளவை அறிந்து கொள்வதற்கு

கீழுள்ள வினாக்கள் பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை

பயிர்	முழுப்பயிரிலுமுள்ள போசனை அளவு (Kg/ha)		
	N	P_2O_5	K_2O
நெல்	207	57	20
சோயா அவரை	162	224	84
உருழைக்கிழங்கு	224	62	347
வாழை	448	448	1680
அன்னாசி	150	120	600

24 கூடுதலாக வளமாக்கி தேவைப்படும் பயிர் எது?
1. நெல் 2. சோயாஅவரை 3. உருழைக்கிழங்கு 4. வாழை 5. அன்னாசி

25. குறைந்தளவு நைதரசன் கொண்ட மண்ணில் பயிரிடுவதற்கு சிபார்சு செய்யும் பயிர் எது?
1. நெல் 2. சோயாஅவரை 3. உருழைக்கிழங்கு 4. வாழை 5. அன்னாசி

26. கொழுப்புணவுகளில் ஏற்படும் பாண்டற் தன்மையைக் குறைக்கும் வழி
1. ஒட்சியேற்ற எதிரிகளை சேர்த்தல் 2. மேசையுப்பைச் சேர்தல் 3. நீரைச் சேர்த்தல்
4. அறை வெப்பநிலையில் சேமித்தல் 5. ஒளியூட்டப்பட்ட இடங்களில் வைத்தல்

27. குறித்த தாவரமொன்றில் உயரம் T குட்டைக்கு t ஆட்சியானது பிறப்புரிமை அமைப்பு Tt கொண்ட ஒரு தாவரம் அதனையொத்த தாவரம் ஒன்றுடன் இனக்கலக்கப்படும் போது எச்சங்களில் உயரமானவைக்கும் குட்டையானவைக்கும் இடையிலுள்ள விகிதம்
1. 3:1 2. 2:1 3. 9:7 4. 4:1 5. 1:1

28. பழங்களையும் மரக்கறிகளையும் தரப்படுத்துவதன் மூலம்
A- உற்பத்திக்கு நல்ல சந்தை விலைகளைப் பெறலாம்
B- பழங்களினதும் மரக்கறிகளினதும் சந்தை விலைகளை நிலைப்படுத்தலாம்
C- அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களைக் குறைக்கலாம்
D- அறுவடைக்குப் பிந்திய பதப்படுத்தலுக்குரிய ஊழியர் தேவையைக் குறைக்கலாம்
மேற்கூறிய கூற்றுக்களுள் சரியானது
1. A யும்,Bயும் 2. Aயும்,Cயும் 3. A யும்,Dயும் 4. Bயும்,Cயும் 5.B யும், Dயும்

29. வயற்கொள்ளளவில் உள்ள வயலொன்றிலிருந்து 60g மண் எடுக்கப்பட்டது 105^oC இல் மாறாநிறை வரும் வரை உலர்த்தியபோது இம்மண்மாதிரியின் நிறை 50g ஆக இருந்தது வயற் கொள்ளவில் மண்ணின் ஈரளிப்புச் சதவீதம்
1. 4.5% 2. 9.0% 3. 12.5% 4. 20.0% 5. 36.0%

30. மூலவுயிர் முதலுருக்காப்புக்கு உதாரணமாக அமைவது
1. சரணாலயங்களில் யானைகளைப் பாதுகாத்தல்
2. பல்லாண்டுத்தாவரங்களை நடுதல்
3. புதிய இயல்புள்ள தாவரங்களை உருவாக்குதல்
4. ஆபத்துக்குள்ளாகும் தாவர இனங்களின் வித்துக்களை கூடியகாலம் சேமித்து வைத்தல்
5. வினைதிறனுள்ள முறையில் நுண்ணங்கிகளைப் பயன்படுத்தி பீடைகளைக்கட்டுப்படுத்தல்

31. பின்வரும் எப்பயிர் செய்கைக்காக நிலம் தயார் படுத்தும் போது மண்கட்டமைப்பு அழிக்கப்படுகின்றது
1. சோளம் 2. நெல் 3. கௌபீ 4. நிலக்கடலை 5. மிளகாய்

32. காபன், ஐதரசன், ஒட்சிசனுக்குரிய குறைபாடு அறிகுறியினை தாவரங்கள் ஒருபோதும் காட்டுவதில்லை ஏனெனில்
1. இரசாயன வளமாக்கி மூலம் இம்மூலகங்களை உறுஞ்சுவதால்
2. சேதனப்பசளை மூலம் இம்மூலகங்களை உறுஞ்சுவதால்
3. தாவரங்களினால் இம்மூலகங்களை மண்ணிலிருந்து உறுஞ்சக்கூடியதாய் இருத்தல்
4. வளிமண்டலத்திலிருந்தும் நீரிலிருந்தும் தாவரங்கள் இம்மூலகங்களை உறுஞ்சுவதால்
5. தாவரத்தினுள்ளேயே இம் மூலகங்களைத் தொகுக்கக்கூடியதாய் இருத்தல்

www.ikeu.lk

33. பின்வரும் கூற்றுக்களில் மிகவும் சரியானது எது?
1. உயர்தோற்ற அடர்த்தி கொண்ட மண்கள் நல்ல காற்றூட்டம் உள்ளவை
2. குறைந்த தோற்ற அடர்த்தி கொண்ட மண்கள் நல்ல காற்றூட்டம் உள்ளவை
3. நிலப்பண்படுத்தலால் மண்ணில் தோற்ற அடர்த்தி அதிகரிக்கப்படுகின்றது
4. கருமை நிற மண்கள் உயர் தோற்ற அடர்த்தி கொண்டவை
5. மணியுருவான கட்டமைப்புடைய மண்கள் உயர் தோற்ற அடர்த்தி கொண்டவை


34. சேதன விவசாயம்
1. சுற்றாடலுக்குப் பாதுகாப்பானது
2. உற்பத்திச் செலவு குறைந்தது
3. விளைவு உயர்ந்தது
4. மரபு றிதியான/ பாரம்பரியப் பயிர்களுக்கு மிக உகந்தது
5. அயனமண்டல நாடுகளின் விவசாயிகளிடையே பிரசித்தி பெற்றது

35. தற்போது காலநிலை மாறுதல் ஏற்படுவதால் பல பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்குகின்றனர் இப்பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய விவசாய நடவடிக்கையில் அடங்காதது எது?
1. வினைதிறனான பண்ணை முகாமைத்துவம்
2. நுண்நீர்ப்பாசன முறையைப் பயன்படுத்தல்
3. மண், நீர் காப்பு முறைகளைப் பயன்படுத்தல்
4. கழிவு நீரை மீண்டும் பயன்படுத்தல்
5. இரசாயனப் பசளையை அதிகளவில் பயன்படுத்தல்

36. ஈரஉலர்குமிழ் வெப்பமானியின் வெப்பநிலை வித்தியாசம் பற்றிய கூற்றுக்களில்
A- வித்தியாசம் குறையும் போது வளிமண்டல ஈரப்பதன் கூடும்
B- வித்தியாசம் குறையும் போது வளிமண்டல ஈரப்பதன் குறையும்
C- வித்தியாசம் கூடும் போது வளிமண்டல ஈரப்பதன் குறையும்
D- வித்தியாசம் பூசியமாகும் போது வளிமண்டல ஈரப்பதன் 100% ஆக இருக்கும்
இவற்றுள் சரியானது?
1. A,B,C 2. B,C 3. A,C,D 4. A,D 5. AC

37. தாவர விருத்தியில் கொல்கிசின் பயன்படுவது
1. கலப்பிரிவைத் தடுக்க
2. ஒருமடியத் தாவரங்களைப் பெற
3. நிறமூர்த்த எண்ணிக்கையை இரட்டிப்பாக்க
4. பிறப்புரிமை மாற்றப்பட்ட அங்கிகளைப் பெற
5. வளர்ப்பு அறையைக் கிருமியழிக்க.

38. கீழேதரப்பட்டுள்ள வரைபு பின்வரும் எவ் உடற்றொழிற் செயற்பாட்டுடன் தொடர்பு அற்றது
1. ஒளித்தொகுப்புவீதத்திற்கும் காபனீரொட்சைட் செறிவுக்கும்
2. சுவாசவீதத்திற்கும் ஒட்சிசன் செறிவுக்கும்
3. ஆவியுயிர்ப்பு வீதத்திற்கும் காற்றின் வேகத்திற்கும்
4. ஆவியுயிர்ப்பு வீதத்திற்கும் வெப்பநிலைக்கும்
5. ஆவியுயிர்ப்பு வீதத்திற்கும் ஒளிச்செறிவுக்கும்



39. இலிப்பிக்கின் இழிவு விதிபற்றிக் கூறக்கூடியது
1. மண்ணரிப்பின் இழிவாக்கல் தொடர்பானது
2. பயிர் விளைவு அதிகரிப்பு கூடியளவு கிடைக்கும் போசணை மூலகத்தால் தீர்மானிக்கப்படும்
3. வாயுக்கனவளவு அதன் வெப்பநிலை இழிவளவாகும் போது மாற்றமடையும்
4. பயிர் விளைவு அதிகரிப்பு குறைந்தளவு கிடைக்கும் போசணை மூலகத்தால் தீர்மானிக்கப்படும்
5. இது தாவர நீர்ப்பாசனத்துடன் தொடர்பு பட்டது

40. மண்ணில் ‘‘வாடற்குணகம்’’ என்பதை எவ்வாறு விளக்கலாம்
1. நண்பகலுக்குப்பின் தாவரம் வாடிக்காணப்படல்
2. கடும் வரட்சியின் போது தாவரங்கள் வாடிக்காணப்படுதல்
3. PF பெறுமானம் 2.7—4.2 க்குமிடையில் மண்ணிலுள்ளநீரின் அளவு
4. PF பெறுமானம் 4.2—4..5 க்குமிடையில் மண்ணிலுள்ள நீரின் அளவு
5. நிரந்தர வாடல் நிலையில் 100g மண் கொண்டுள்ள நீரின் அளவு

41. அசைபோடும் விலங்குகளின் பண்படுத்தா உணவுச்சமீபாட்டிக்கு முக்கியமான உணவுக்கால்வாயின் பகுதி
1. துந்தம் 2. சமிக்கும் இரைப்பை 3. சிறுவலைவயிறு 4. அசையுண்வயிறு 5. வாய்

42. விதை அட்தாட்சிப்படுத்தலில் கருத்தில் கொள்ளப்படும் மிகவும் பிரதான காரணிகளாவன
1. முளைத்தல் சதவீதம், ஆயிரம் வித்து நிறை, தூய்மை

www.lkedu.lk

2. முளைத்தல் சதவீதம், ஈரலிப்பு சதவீதம், வித்து நிறம்
3. ஈரலிப்பு சதவீதம், தூய்மை, ஆயிரம் வித்து நிறை
4. தூய்மை ,வித்துநிறம், ஈரலிப்பு சதவீதம்,
5. ஈரலிப்பு சதவீதம், முளைத்தல் சதவீதம், தூய்மை

43. பின்வரும் பயிராக்கவியல் மூலம் நோய்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் அடங்காதது எது?
1. எதிர்பினங்களை உருவாக்கல் 2. வித்துக்களில் தொற்றுநீக்கல் 3.நோயுற்ற தாவரத்தை அகற்றல்
4. பயிர்ச்சுழற்சி 5. தூய்மையான நடுகைப்பொருளைப் பயன்படுத்தல்

44. விவசாயி ஒருவர் ஹெக்டயருக்கு 52000 சோளத்தாவரங்களை வைத்திருக்க விரும்பினார் அவருடைய வித்து இறப்பு (mortality) 6% எனின் ஒரு ஹெக்டயர் நிலத்திற்கு தேவையான வித்துக்களின் எண்ணிக்கை
1. 49056 2. 55120 3. 57200 4. 62750 5. 77120

45. நெற்பேதங்களின் வயது எதில் தங்கியுள்ளது
1. முதிர்ச்சிப்பருவத்தின் கால எல்லையில் 2. இனப்பெருக்கப்பருவத்தின் கால எல்லையில்
3. வளர்ச்சிப்பருவத்தின் கால எல்லையில் 4. மட்டம் உருவாகும் காலஎல்லையில்
5. அறுவடைக்காலத்தின் கால எல்லையில்

46. நெற்பயிருக்கு இரசாயனக் களைநாசினி பிரயோகம் மூலம் சூழலில் ஏற்படும் விளைவு அல்லாதது எது?
1. முதல் உற்பத்தியாக்கிகளின் மட்டம் குறைவடையும்
2. பரம்பரை அலகு வளம் அழிந்து போகும்
3. சூழலில் வளி, நீர், மண் என்பன மாசடையும்
4. நச்சுப்பதார்த்தம் உணவுச்சங்கிலி ஊடாக செறிவாக்கப்படும்
5. பயிர்க் களைப்பூண்டுக் குடித்தொகை பொருளாதார எல்லை மட்டத்திற்கு கிழே பேணப்படும்

47. பயிர்ச்செய்கை முறைகளுள் தவறான கூற்று
1. மழைவீழ்ச்சி 508mm விடக்குறைவான பிரதேசங்களில் உலர்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது
2. அதிக சாய்வான மலைப்பிரதேசங்களில் காப்புப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படமாட்டாது
3 பயிர்ச்செய்கை, விலங்குவளர்ப்பு, உயிர்வாயு ஆகியவற்றை ஒன்றுசேர்த்து மேற்கொள்ளப்படுவது ஒன்றிணைந்த பயிர்ச் செய்கையாகும்
4. விவசாய வனச் செய்கையில் மரங்கள், பயிர்கள், பண்ணைவிலங்குகள் ஆகிய பிரிவுகள் அடங்கும்
5. உயிர்ப் பல்வகைமையைக் காக்க (SALT) முறை பயன்படுத்தப்படுகின்றது

48. பின்வரும் பூச்சி வருணங்களில் எது ஊடுருவவும் உறுஞ்சவும் தக்க வாய் உறுப்புக்களையுடை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது?
1. Isoptera 2. Diptera 3. Hymenoptera 4. Lepidoptera 5. Coleoptera

49. கோழிகளில் கம்போரா (Gambora) நோயைத் தோற்றுவிப்பது
1. ஒரு பக்ரீரியா 2. ஒரு வைரசு 3. ஒரு பங்கசு 4.ஒரு புரோட்டோசோவா
5. புறஒட்டுண்ணி

50. மண்கட்டமைப்ப எனக் கருதப்படுவது
1. மணல், களி, அடையல் என்பவற்றின் விகிதங்களை
2. மண்துணிக்கைகளின் ஒழுங்கமைப்பபை
3. மண்ணின் சேதன அமைப்பை
4. மண்பக்கப்பார்வையின் ஆழத்தை
5. A வலயத்தின் (Horizon) தடிப்பை

*****

www.kalvi.lk